# தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை-600 035. தொலைபேசி எண்.044-2951 5590

## <u>ஆணை நாள் 06.08.2026</u>

## <u>முன்னிலை</u>

### முனைவர் அதுல்ய மிஸ்ரா, இ.ஆ.ப. (ஓய்வு)

### மாநில தகவல் ஆணையர்

*****

**<u>வழக்கு எண். SA 2053/SCIC/2025</u>**

திரு.G.R.பூபாலன், த/பெ.திரு.J.கோபால் - மேல்முறையீட்டாளர்
எண்.77/33, வ.உ.சி.தெரு,
வள்ளலார் நகர் கிராமம்
கொண்டசமுத்திரம் பஞ்சாயத்து
குடியாத்தம் - 632 602.
Phone: 85088 19948.

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர் / - பொது அதிகார அமைப்பு
மாவட்ட மேலாளர்
டாஸ்மாக் லிமிடெட்
சென்னை (தெற்கு) மாவட்டம்
அம்பத்தூர், சென்னை - 600 058.

## <u>ஆணை</u>

| | | |
|---|---|---|
| **1.** | **மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்ட மனு** | **25.08.2024** |
| 2. | மனுதாரரின் மனு சட்டப்பிரிவு 6(3)-ன் கீழ் மாற்றம் | 29.08.2024 |
| 3. | மனுதாரரின் முதல் மேல்முறையீட்டு மனு | 21.10.2024 |
| 4. | மேல்முறையீட்டு அலுவலரின் பதில் | 24.10.2024 |
| 5. | மனுதாரரின் இரண்டாம் மேல்முறையீட்டு மனு | 25.01.2025 |
| 6. | பின்னர் பொதுத் தகவல் அலுவலரின் பதில் | 07.08.2025 |
| 7. | மனுதாரரின் ஆட்சேபனை மனு | 24.10.2025 |

மனுதாரர், தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் 25/08/2024 நாளிட்ட மனுவை பொதுத் தகவல் அலுவலர்/ மேலாண்மை இயக்குநர், டாஸ்மாக் லிட்,

எழும்பூர், சென்னை அவர்களுக்கு அனுப்பி, அதில் "G.R.பூபாலன் ஆகிய நான் கடந்த 03/04/2024 ஆம் தேதியிட்டு 6 பக்க மனு மதுபான கடை மேற்பார்வையாளர் பணி கோரி பதிவு அஞ்சலில் தமிழ்நாடு மாநில வாணிப கழக சென்னை தெற்கு மாவட்ட மேலாளர் அவர்கள் அலுவலகத்திற்கு அனுப்பி வைத்தேன். அதனை 05/04/2024 ஆம் தேதி அன்று பெறப்பட்டுள்ளதாக Acknowledgement-ல் இருந்து எனக்கு தெரிய வந்தது. என்னால் அனுப்பப்பட்ட மனுவின் 6 பக்கத்தின் ஒளிம நகல்களில் பக்கத்திற்கு பக்கம் பொதுத் தகவல் தரும் அலுவலரால் சான்றொப்பமிட்டு பெற்றுத் தரக் கோருகிறேன்." என்பன போன்று 2 (இரண்டு) இனங்களில் தகவல்களை அளிக்கக் கோரியுள்ளார்.

2. இன்றைய (06/08/2026) ஆணையத்தின் காணொளி காட்சி வாயிலான விசாரணையின் போது மனுதாரர் திரு.G.R.பூபாலன் அவர்கள் ஆஜராகவில்லை. தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீட்டு விதிகள், 2012) விதி 7(2)-ன்படி மனுதாரர் விசாரணைக்கு ஆஜராவது கட்டாயமாகும். மனுதாரரின் வருகையின்மை ஆணையத்தால் பதிவு செய்யப்படுகிறது. பொது அதிகார அமைப்பின் சார்பில், திரு.ஜஸ்வந்த் கண்ணன்.R., மாவட்ட மேலாளர், சென்னை (தெற்கு) அவர்கள் ஆஜராகி மனுதாரருக்கு ஏற்கனவே 14/02/2025 மற்று 15/07/2026 ஆகிய தேதிகளிட்ட கடிதங்கள் வாயிலாக தகவல்களை அனுப்பியுள்ளதாகத் தெரிவித்ததோடு, அது தொடர்பான நகல்களையும், மனுதாரரிடமிருந்து 24/07/2026 தேதியிட்டுப் பெற்ற மன நிறைவு கடிதத்தினையும், ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார். **ஆணையத்தின் அழைப்பாணை அனுப்பப்பட்டு, நேரடி விசாரணையில் பங்கேற்று தனது வாதுரையினை பதிவு செய்ய வாய்ப்பளிக்கப்பட்டும், இன்றைய விசாரணையில் மனுதாரர் ஆஜராகத் தவறியுள்ளார். எனவே, இவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீதான வழக்கின் விசாரணை இத்துடன் முற்றாக்கம் செய்யப்படுகிறது.**

**ஓம்./-(அதுல்ய மிஸ்ரா)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவி பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 2053/SCIC/2025</u>**

**பெறுநர்**

**<u>பொது அதிகார அமைப்பு</u>**

பொதுத் தகவல் அலுவலர் /
மாவட்ட மேலாளர்
டாஸ்மாக் லிமிடெட்
சென்னை (தெற்கு) மாவட்டம்
அம்பத்தூர், சென்னை - 600 058.

## மேல்முறையீட்டாளர்

திரு.G.R.பூபாலன், த/பெ.திரு.J.கோபால்
எண்.77/33, வ.உ.சி.தெரு,
வள்ளலார் நகர் கிராமம்
கொண்டசமுத்திரம் பஞ்சாயத்து
குடியாத்தம் - 632 602.
Phone: 85088 19948.

RG/Sr.PC